கிரயப் பத்திரம்

***18423—திரு. இ. கருணாநிதி:**

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லாவரம் தொகுதி, பம்மலில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய இடத்தில் வசிப்பவர்களுக்கு கிரயப் பத்திரம் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பல்லாவரம் தொகுதி, பம்மலில் தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மேம்படுத்தப்பட்ட திட்டப் பகுதிகளை வாரியத்தின் பெயரில் நில உரிமை மாற்றம் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நில உரிமை மாற்றம் செய்யப்பட்டபின் முழுத் தொகையினை செலுத்திய பயனாளிகளுக்கு கிரயப் பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள்.*

திரு. இ. கருணாநிதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். பல்லாவரம் தொகுதி, தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதி ஆகும். அதில் பம்மல் பகுதியிலுள்ள அண்ணா நகர், மூவேந்தர் நகர், ஈஸ்வரன் நகர் மற்றும் மூங்கில் ஏரிப் பகுதிகளில் எத்தனை நபர்களுக்கு இதுவரை கிரயப் பத்திரம் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

[2022 ஏப்ரல் 26

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தில் 1984 மற்றும் 1990 ஆம் ஆண்டுகளில் அண்ணா நகர், மூவேந்தர் நகர், ஈஸ்வரன் நகர் மற்றும் மூங்கில் ஏரி ஆகிய நான்கு திட்டப் பகுதிகளில் மேம்படுத்தப்பட்ட மொத்த மனைகள் 1,531. அவற்றுள் 804 மனைகளுக்கு ஒதுக்கீடு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த நிலங்களை வாரியத்தின் பெயரில் நில உரிமை மாற்றம் செய்ய தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையிலே உயர்மட்ட செயலாக்கக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் அரசாணை பெறப்பட்டு, பணம் செலுத்திய நபர்களுக்கு விரைவில் கிரயப் பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள்.*

திரு. இ. கருணாநிதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள உயர்மட்ட செயலாக்கக் குழு ஒப்புதல் வழங்கிய திட்டப் பகுதிகள் எவ்வளவு என்பதையும், வழங்கப்பட வேண்டிய திட்டப் பகுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழக அரசு பொறுப்பேற்ற பிறகு 221 திட்டப் பகுதிகளில் உள்ள 38,962 மனைகளுக்கு அரசாணை வழங்க, உயர்மட்ட குழுவால் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. இதுவரை 19,651 மனைகளுக்கு அரசாணை பெறப்பட்டு, 510 நபர்களுக்கு கிரயப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. முழுத் தொகையும் செலுத்திய பயனாளிகளுக்கு அந்தத் திட்டப் பகுதிகளில், மாதந்தோறும் நடைபெறுகின்ற சிறப்பு முகாம்களில் பத்திரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*